# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 தை 17 ஞாயிற்றுக்கிழமை (31-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:55


பொது சன நூலகம் 02 FEB 1999 யாழ்ப்பாணம்

தப்பி ஓடிய

## படையினர் திரும்பிவர அரசு மீண்டும் அவகாசம்

கொழும்பு, ஜன.31

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீண்டும் படையில் வந்து இணைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பல்வேறு காரணங்களுக்காக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் அனைவரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் வந்து படையில் இணைந்து கொள்ளலாம் எனவும்—

இவ்வாறு வந்து இணைபவர்கள், லீவு பெறாமல் கடமைக்கு சமுகமளிக்க முடியாது இருந்தனர் எனக் கருதப்படுவர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை படையில் வந்து மீண்டும் இணையாதவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# முல்லைத்தீவு கடற் பரப்பில் 5 மணி நேரம் கடும் மோதல்!

## புலிகள் தரப்பில் மூவர் உயிரிழப்பு

வவுனியா. ஜன. 31

முல்லைத்தீவுக் கடற் பரப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரை ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் — விடுதலைப் புலிகளுக்கும்இடையே மோதல் ஒன்று இடம் பெற்றதாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் மேஜர் வேங்கை (இராசையா நாகேஸ்வரி — யாழ்ப்பாணம்), மேஜர் கலியரசன் (முத்துராசா லிங்கராஜ் — கிளிநொச்சி), மேஜர் சாந்தகுமார் (ஜெயராஜா ஜேம்ஸ் போல் — புதுக்குடியிருப்பு) ஆகியோர்உயிரிழந்ததாகபுலிகள் தரப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதல் ஒன்றில் காயத்திரி (மாணிக்கப்போடி தேவமணி — மட்டக்களப்பு) என்பவர் தமது தரப்பில் உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-7)

# சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையில் யாழ். குடாநாட்டு மக்கள்!

## ஐ. நா. தூதரகப் பிரதிநிதியிடம் மனிதநேய ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 31

யாழ். குடாநாட்டில் மீளக்குடியேறிய மக்கள் தடைகள், கெடுபிடிகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளினால் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலையில் உள்ளனர் என்று மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியிடம் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், வடபகுதி கைது செய்யப்பட்டோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உட்பட 16 அமைப்புகளின் பிரதிநிதிகளடங்கிய மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக வதிவிடப்பிரதிநிதி திருமதி ஜெனத்லிம்மை யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி தூதரகத்தின் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடலொன்றை நடத்தியது.

அப்பொழுதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ்ப்பாண நிலவரம் தொடர்பாக திருமதி ஜெனத்லிம்முக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டதுடன் அறிக்கை ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்

( 12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை: ஐ. நா. தூதரகம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவதற்கான முயற்சியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஈடுபட்டு வருகிறது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி திருமதி ஜெனத்லிம் நேற்று தம்மைச் சந்தித்த மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை மேற்படி அமைப்புக்கள் சுட்டிக்காட்டிய போதே அவர் இத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் மோதல்!

மட்டக்களப்பு ஜன. 31

மட்டக்களப்பு வாகரையில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம் பெற்றது.

மான்கேணி முகாமில் இருந்து காயன் கேணி முகாம் நோக்கிச் சென்ற படையணி மீது விடுதலைப்புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்திய போது இந்த மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் 9 புலிகள் உயிரிழந்தனர் என்றும் இரு படையினர் காயம் அடைந்தனர் என்றும் பாதுகாப்புத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. புலிகள் தரப்பில் இருந்து இது குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. (இ-21)

## நாளை விமான சேவை

யாழ்ப்பாணம், ஜன. 31

பலாலிக்கும் — கொழும்புக்கும் இடையில் நேற்று விமானப் போக்குவரத்து தடைப்பட்டபோதும், நாளை விமான சேவை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக நிலைய அதிகாரி தெரிவித்தார்.

நாளை பயணம் செய்வதற்கான ரிக்கெட்டுக்கள் பயணிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன என்றும் —

நாளை மறுதினம் பயணம் செய்பவர்களுக்கான டிக்கெட்டுக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12.30 வரை வழங்கப்படும் என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3)

## மட்டக்களப்பில் நேற்று குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு, ஜன. 31

மட்டக்களப்பு நகரில் நேற்றிரவு 8.30 மணியளவில் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நடைபாதை ஓரம் அமைக்கப்பட்டிருந்த சுரண்டல் ரிக்கெட் விற்பனை நிலையமொன்றில் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

குண்டு வெடிப்பினால் சுரண்டல் ரிக்கெட் நிலையம் முற்றாக சேதமடைந்தது. (இ-21)

# பரந்தன் பகுதியில் படையினர் மீது புலிகள் மோட்டார்த் தாக்குதல்!

## ஒருவர் பலி, மூவர் காயம்

கொழும்பு, ஜன. 31

பரந்தன் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் — மேலும் மூன்று பேர் காயம் அடைந்தனர் எனவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது:

பரந்தன் பகுதியில் விடுதலைப் புலிகளின் காப்பரண் ஒன்றைக் கண்ட படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தி அதனை முற்றாக அழித்தனர் எனவும் —

குறிப்பிட்ட தாக்குல் நடந்து ஒரு சில மணி நேரத்தில் விடுதலைப் புலிகள் படையினர் மீது பதில் தாக்குதல் நடத்தினர் எனவும்—

இதன்போதே படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் எனவும், 3 பேர் காயம் அடைந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-க)

## வன்னி மக்கள் எண்ணிக்கை கணக்கெடுப்பு நடத்துவது குறித்து நேற்று ஆராய்வு

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள மக்களின் எண்ணிக்கையைக் கணக்கு எடுப்பது குறித்து நேற்று வவுனியாவில் ஆராயப்பட்டது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ். தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்களும், சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் பிரதேச செயலர்களும், வடமாகாண மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் என். ஒபடகேயும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களகரமான திறப்பு

# ராஜா வெதுப்பகம்

இல. 39, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணத்தில்
இன்று காலை 10 மணிக்கு
ராஜா வெதுப்பகம்
என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க உள்ளோம்.
அன்பர்கள், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ராஜா வெதுப்பகம்**
இல 39, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(62645)

## I. T. N. கொமினிக்கேசன் சென்ரர்

உள்நாட்டு, வெளிநாட்டு நேரடி அழைப்புகள்
24 மணிநேர 'பக்ஸ்' வசதிகள்

வெளிநாடு — 0094-70-212401
உள்நாடு — 070-212401
பக்ஸ் — 070-212401

27, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,

(62637)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் மூத்த உறுப்பினரும் முன்னாள் நிர்வாகியும் ஆலோசகருமாகிய

**வே. சின்னத்தம்பி** அவர்கள்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

25-01-99 அன்று காலமாகியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மோகனதாஸ் சனசமூக நிலையம்
மட்டுவில் கிழக்கு.

(62653)

## கண்ணீர் அஞ்சலி

எமது பல்கலைக்கழக மருத்துவபீட உயிர்இரசாயனவியல் துறைத் தலைவர்
பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம்
அவர்களின் அன்புத் தயார்
திருமதி
**யோகவதி அரசரத்தினம்**
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் அன்னாரின் குடும்பத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

19 ஆம் அணி யாழ். மருத்துவபீடம்.

(62664)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னப்பா துரையப்பா**
(இளைப்பாறிய சிறாப்பர் சாவகச்சேரி)

அன்பும், பண்பும் கொண்டு
ஆளுமையில் உயர்வு கொண்டு
இல்லறத்தில் நல்லறம் கண்டு
ஈகையில் நிறைவு கண்டு
உலகம் உவப்ப வாழ்ந்தீர்— வற்றாத
ஊற்றதுபோல் உம் நினைவு எம் நெஞ்சில்
எப்போதும் நிறைந்திருக்கும்!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தாளையம்பதி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[சி/6319]

## நயினாதீவுக்கு விசேட சேவை

யாழ்ப்பாணம், ஜன. 31
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு மேற்படி ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட பஸ் சேவையும், குறிகாட்டுவானில் இருந்து விசேட படகு சேவையும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விக்னா

கல்வி நிறுவனம்
O/L Day Class
பிரிவு 1
ஆரம்பமாகிவிட்டது.
Mon. 8 — 2 மணி.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(62635)

## Spoken English

கொக்குவில்.
( ஞானபண்டிதர் அருகில் )
by: A. BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
02 - 02 - 99
செவ்வாய் மாலை 5மணி

(சி/6331)

## Spoken English

கொக்குவில்.
( ஞானபண்டிதர் அருகில்)
by: A.BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
10 - 02 - 99
புதன் காலை 8 மணி

(சி/6332)

## A/L Day Class

( Paper )
Tamil Mr. அருள்
Log, Mr. மகிந்தன்

- ஆண்டு 6 தொடக்கம் 11 வரை
- புலமைப்பரிசில் Yr. 5
- Spoken English
- 99 G.A.Q. & 1st in Com.

**SHAMROCK**

(சி/6328)

## கபூரி வீடியோ விஷன்

பஸ் நிலையம், அச்சுவேலி.
இன்றைய புதிய CD வெளியீடு!
பார்த்திபன்
நடித்த
② ஹவுஸ் புல்
CD வெளியீடு மாஜா

(சி/6334)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
அர்ஜுன், பூஜா
நடித்த
சூரியப் பார்வை
(புதிய வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070—212223

(62429)

## D. M. I.

233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எழுதுவினைஞர் பரீட்சைக்கான வகுப்பு
ஆரம்பம்:- 01- 02- 1999 திங்கட்கிழமை
காலை 9 மணி (பழைய நேரம்)
ஆசிரியர்:- T. தவசேகர்.
★ கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சைக்கான வகுப்பு வெள்ளிக்கிழமைகளில் 8 மணிக்கு நடைபெறுகின்றது.

- D. SAM

(சி/6321)

## பிற்போடப்பட்டுள்ளது

கச்சேரி கிழக்கு கடுக்காயம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புனருத்தாரண நிதிக்காக 30-1-99 அன்று அதிர்ஷ்டம் பார்க்க இருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- பரிபாலன சபையினர்

ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்,
கச்சேரி கிழக்கு.

(சி/6325)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் இராசரத்தினம்

அரியாலையைச் சேர்ந்த முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் பொன்னம்பலம் இராசரத்தினம் கொழும்பில் 29-01-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் கனகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் கங்காதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீ இராஜேந்திரராஜா (கொழும்பு), ஸ்ரீதேவி, ஸ்ரீகலாதேவி (ஜேர்மனி) காலஞ்சென்ற ஸ்ரீஸ்ரெலாதேவி, ஸ்ரீரேணுகாதேவி, ஸ்ரீரெட்ணாதேவி (கனடா), கணேசரட்னம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயதேவி, பாலச்சந்திரன் (உதயன்), ராகவன் (பாலன்), ராஜ்குமார், பாஸ்கரன் (செல்வம்), கமல்(ஜேர்மனி), சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் பாக்கியலட்சுமியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 60/14. ஸ்ரீபஞ்சானந்த மாவத்த, கொழும்பு 15 இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கனத்தைஇந்துமயானத்திற்கு(01-02-99) திங்கட்கிழமை அன்று எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பாலச்சந்திரன் (உதயன்)
பாஸ்கரன் (செல்வம்)
(மருமக்கள்)

418, நாவலர் வீதி,
அரியாலை.

கொழும்பு TP- 527644, 522279

(62648)

### R. R. SCOTT

ஓய்வுபெற்ற பொலீஸ் சுப்பிரண்டன் R. R. SCOTT நேற்றுக் காலமானார்.

இவர் ஜெயராணியின் (செல்வி கணபதிப்பிள்ளை) அன்புக் கணவரும், றோமலாபோஸ் (சென்னை), டாக்டர் திருமதி ரோசினி ஞானப்பிரகாசம் (லண்டன்), றேனுகா (யோன்கீல்ஸ் — கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான திருமதி எல்சி துரைரத்தினம், E. T. SCOTT ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செல்வன் SCOTT
கோப்பாய்.

14 B, Mary's Road,
Mt. Lavinia.
T. P. - 731466

(சி/6316)

### இளையதம்பி தர்மராசா

புத்தூர், மணற்பகுதியை பிறப்பிடமாகவும் சிவன் வீதி நல்லூரைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி தர்மராசா அவர்கள் இயற்கையெய்தி விட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தர்மதேவி தயாளன் (ஆசிரியர்), தயாபரன் (லண்டன்) தர்மரூபி, தர்மலோஜினி, தயாரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருமைத்துரை, ஜெயகுமாரி, ஐரின், மதிசிங்கம் (ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்), ஸ்ரீ பண்டாகரன் (யாழ். பல்கலை ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்தன் (லண்டன்), அனந்தன், துமிலா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆரூரன் (யாழ். மத்திய கல்லூரி), கஜிர்தன், பவதாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-1-99) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. தயாளன்
(மகன்)

புதிய சிவன் வீதி.
நல்லூர்.

(62651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு 6 மருந்துக் கலவையாளர்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக திருகோணமலையிலுள்ள வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் ஆறு புதிய மருந்துக் கலவையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் தமது ஒரு வருட கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்துள்ள நான்கு பெண்களுக்கும், இரண்டு ஆண்களுக்கும் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருக்கும் மருந்துக் கலவையாளர்களுக்கான வெற்றிடங்களுக்கு இவர்கள் கடமையாற்ற நியமனம் செய்யப்படவுள்ளதாக யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-135)

### சுருட்டை நோயை அடுத்து

# புகையிலைக் கன்றுகள் மீள் நடுகை ஆரம்பம்

கோண்டாவில், ஜன. 31

ஈவினைப் பகுதியில் விவசாயிகள் தமது விளை நிலங்களில் பயிரிட்ட புகையிலைக் கன்றுகளை அழித்துவிட்டு புதிய புகையிலைக் கன்றுகளை நடுகை செய்கின்றனர்.

தொடர்ச்சியான மழை காரணமாகவும் வீசிய வாடைக்காற்று காரணமாகவும் புகையிலைக் கன்றுகளுக்கு சுருட்டை நோய் பீடித்ததை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (ஐ—ரீ)

# சங்கானை, கோப்பாய்ப் பகுதிகளில் வங்கிக் கிளைகள் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

சங்கானை, கோப்பாய் போன்ற பகுதிகளில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றவற்றின் கிளைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி பிரதேச செயலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கூட்டம் அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

வங்கிக் கிளைகளைத் திறப்பது தொடர்பாக பல தடவைகள் இக்கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று சுட்டிககாட்டிய கோப்பாய் பிரதேச செயலர் எஸ். கேதீஸ்வரன், கோப்பாய் கிராமிய வங்கிக்கு மக்கள் வங்கிக்குள்ள வசதிகளைச்செய்து தந்தால் கிராமிய வங்கி மூலம் அப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

இதேவேளை ஊர்காவற்றுறையிலும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றை திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார். (இ—5)

# முயல் பிடிக்கச் சென்றவர் துப்பாக்கிச்சூட்டுக்கு பலி!

### பளைப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி, ஜன. 31

முயல் பிடிப்பதற்காக இரவு தடம் வைக்கச் சென்ற குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு பளை தர்மக்கேணியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குண்டுமணி என அழைக்கப்படும் ஏழு பிள்ளைகளின் தந்தையே (வயது 42) மரணமானவராவார்.

இவரது சடலம் பளைப் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. [ஐ-117]


உடுப்பிட்டி தேவன் குறிச்சி சமரபாகு

## கற்பக விநாயகர் தேவஸ்தானம் முருகன் ரத வெள்ளோட்டம்

இன்று (31-01-99) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு முருகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட ரத வெள்ளோட்ட வைபவத்தில் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

ரத நிர்மாணம்: இந்திர கலாலயஸ்தபதி
நாகரத்தினம் மகேந்திரன்,
உடுப்பிட்டி.

பரிபாலன சபை
கற்பக விநாயகர் தேவஸ்தானம்
உடுப்பிட்டி. (62642)

## உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

புனராவர்த்தன அஷ்டபந்தன

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சிறப்புற நடைபெற

## பிரார்த்திக்கின்றோம்

இக் கும்பாபிஷேக திருநாளில் அடியார்கள் அனைவரும் முருகப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்தி அடைய வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

MYURA ELECTRICALS.,
மயூறா எலக்ரிக்கல்ஸ்,
301, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(62589)

உ
சிவமயம்

## அருள்மிகு நீர்வேலிக் கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம்

(31 - 01 - 1999 ஞாயிறு காலை 7.45 முதல் 8.30 மணி வரை)

தைப்பூசப் பெருநாளில் எம் குலதெய்வத்தின் குடமுழுக்குக் காண வாரீர்!



ஆறுமுகப் பெருமானின் பேரருள் அனைவருக்கும் நல்லருள் பாலிக்க பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குலகுரு வேதஞான மூதறிஞர் சுவாமிநாத இராசேந்திரக் குருக்களின் நல்லாசியையும் வேண்டி வணங்குகிறோம்.

(சி/6314) முருகப் பெருமானின் அடியார்கள்.

உ
சிவமயம்

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் தை மாதம் 17 ஆம் நாள் (31 - 01 - 99) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

பிரதான வீதி, சங்கானையில் அமைந்துள்ள

## வரதாஸ் கிறீம் ஹவுஸ்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க இருக்கின்றோம். அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

வரதாஸ் கிறீம் ஹவுஸ்,
பிரதான வீதி, சங்கானை,

வா. கனகராஜாவும்,
நா. சுப்பிரமணியமும்.
(62643)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி முடமாவடி அருள்மிகு

# ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக மலர்

### கும்பாபிஷேகப் பிரதமகுரு வழங்கும் அருளாசி

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, முடமாவடியில் கோயில் கொண்டு எழுந்தருளி எம்மை எல்லாம் காத்தருளி நம் நோய் பிணி தீர்த்து திருவருள் பாலிக்கிறார் அருள் மிகு ஞானவைரவர். நாட்டில் சமாதானமும் அமைதியும் பெற வைரவப் பெருமானுடைய திருவருள் கை கூட வேண்டும். உலகத்தில் வாழும் எல்லா உயிர்களுக்கும் காவற் தெய்வமாக அருவத் திருமேனி கொண்டு பாலகனாக உதித்து வேண்டுப வருக்கு வேண்டுதல் பெற அருள் பாலிக்கும் எல்லாம் வல்ல சாமுண்டி சமேத ஞான வைரவப் பெருமானுடைய இஷ்ட சித்திகளைப் பெற்று அவரது திருப்பாதங்களை வணங்குவோமாக.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். கும்பாபிஷேகத் திருவிழா காண்பது பெரும் பேறுகளையும் உய்தி பெறவும் உறுதுணையாக அமையும்.

ஞானவைரவப் பெருமானின் அருட் பொலிவு அடியார்கள் ஆலய நிர்வாகிகள் உட்பட்ட எல்லா மக்களுக்கும் சாந்தியும், சகல சௌகரியங்களும் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி நல்குகிறேன்.

லோகா சுகினோ பவந்து
கும்பாபிஷேக பிரதமகுரு

**சிவப்பிரம்மஸ்ரீ பொன். வரதராஜக்குருமணி**
கல்வியங்காடு வீரபத்திர கோயில் பிரதமகுரு.

### துர்க்கா துரந்தரியின் ஆசி

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவூராகிய திருநெல்வேலியிலே முடமாவடியில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் ஞான வைரவப் பெருமானுக்கு குடமுழுக்கு வைபவம் என அறிந்து அக மகிழ்கின்றோம்.

ஆலயங்கள் புனிதம் பெறும்போது அடியவர்கள் வாழ்வும் புனிதம் பெறும். எம் முன்னோர் இறை நம்பிக்கையையும், நேர்மையையும் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு தம் வாழ்வை அமைத்தனர். அவ்வாழ்வு முறையில் சஞ்சலமில்லை; அச்சமில்லை.

இறை நம்பிக்கைதான் இடரில்லாத வாழ்வுக்கு இனிய வழி. எனவே ஊர்தோறும் ஆலயங்கள் புனித அருட் தலங்களாக மாற அடியார்கள் ஆவன செய்ப பல வேண்டும்.

திருநெல்வேலி கிழக்கு வாழ் மக்கள் வைரவப்பெருமான் ஆலயத்தை புனர் நிர்மாண செய்து குடமுழுக்குச் செய்வது எல்லோருக்கும் நன்மை பயக்கும் இனிய பணியாகும் இப்பணியில் ஈடுபட்டவர்களை பாராட்டுவதோடு குடமுழுக்கு வைபவம் சிறப்புற பரமன் திருத்தாளைப்பணிந்து வணங்கி நிறைவு செய்கிறேன்.

**துர்க்கா துரந்தரி**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்

### காக்கும் கடவுள் வைரவரை அனவரதமும் துதிப்போம்

திருநெல்வேலித் திருப்பதியில் முடமாவடியில் உறைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தில் குடமுழுக்குப் பெருவிழா நிகழ் இருப்பது அறிந்து சைவ அன்பர்கள் யாவரும் அகமகிழ்வார்கள். சைவத்திருக்கோயில்கள் யாவும் புனருத்தாரணம் செய்து புதுப்பொலிவு பெறும்போது அடியவர்களின் வாழ்வும் புனிதம் பெறும் என்பது சைவ சமய மரபு.

திருநெல்வேலியில் பழம்பதியாக விளங்கும் வைரவப் பெருமானுக்கு, இவ்வாண்டு முதல் நிர்வாக சபை அமைத்து நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அந்நியர் ஆட்சியின் போது எமது சைவ மதம் அழியாது காப்பதற்கு, சைவ மக்கள் கிணற்றடிகளிலும், மரத்தடிகளிலும், மறைவிடங்களிலும் வைரவப் பெருமானை இருத்தி வழிபாடு செய்தனர். இவ்வரலாற்றை நினைத்துப் பார்க்கின்ற போது வைரவர் வழிபாடு ஈழத்தில் சைவம் காக்க எத்துணை முக்கியத்துவம் பெற்றது என்பதனை உணரலாம்.

காவற் தெய்வமாக விளங்கும் வைரவப் பெருமானை அனவரதமும் துதித்தால் அச்சமில்லை என்பது எமது மூதாதையரின் நம்பிக்கை. ஊர்தோறும் எம்முன்னோர் காத்த ஆலயங்களை புனர்நிர்மாணம் செய்து புனிதம்பேணுவது சைவசமயத்தவரின் புனிதமான கடமை.

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீஞான வைரவப் பெருமான் எம் திருப்பூமியைக் காத்தருள இவ் வேளை யாவரும் பிரார்த்திப்போமாக.

**செஞ்சொற் செல்வர் - ஆறு. திருமுருகன்.**

# ஆலயத்தின் வரலாறு

பரமனை மதித்திடா பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்-

அருட் சிறப்புமிக்க திருத்தலங்கள் நிறைந்த திருவூர் திருநெல்வேலி. சுவாமி ஞானப்பிரகாச முனிவர் முதல் பல ஆன்மீகப் பெரியவர்கள் நடமாடிய இப்புண்ணிய திருப்பதியிலே முடமாவடி என்னும் சிறப்பிடத்தில் ஞான வைரவப் பெருமான் குடிகொண்டு அருளாட்சி புரிந்து வருகிறார்.



பல வருடங்களுக்கு முன் பூவரசு நிழலில் திரிசூலம் வைத்து தம் காவற் தெய்வமாக அடியவர்களால் பூசிக்கப்பட்ட இத்திருத்தலம் இன்று பெரு வளர்ச்சியோடு கூடிய ஆலயமாக மிளிர்கிறது.

இவ்வாலயத்தை புனிதமாக பராமரித்துப் பேணியவர் அமரர் உயர்திரு. வே. சுப்பையாபிள்ளை அவர்கள். குடிசையில் இருந்த கோயிலை வளர்த்தெடுத்து அடியவர்கள் பலர்வந்து வழிபட உதவியவர் அமரர் சுப்பையாபிள்ளை. 1928இல் ஆலயத்தின் முதலாவது மகாகும்பாபிஷேகத்தை நடத்தி திருநெல்வேலி வாழ் மக்களின் அன்புக்கு பாத்திரமாக இவர் விளங்கினார்

திரு. சுப்பையாப்பிள்ளை அவர்கள் காலமான பின் அவரது மைந்தர் திரு, சு. சண்முகராசா அவர்கள் ஆலயத்தைப் புனிதமாகப் போற்றி வந்தார். 1995 இடப்பெயர்வும் போர்ச் சூழலும் இப்புனித ஆலயத்தையும் பாதிக்கத் தவறவில்லை.

பல அடியார்களின் குலதெய்வமாகவும் அருட்தலமாகவும் விளங்கிய இவ்வைரவப் பெருமானின் சந்நிதானத்தை புனர்நிர்மாணம் செய்து காக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆலய தர்மகர்த்தாக்களின் பேராதரவோடு ஆலயத்துக்கு புதியதோர் நிர்வாக சபை இவ்வாண்டு உருவாக்கப்பட்டு புனர்நிர்மாணப்பணிகள் தொடர்ந்தன. அடியவர்களின் காணிக்கைகளால் திருப்பணிகள் நிறைவுபெற்று தைத் திங்கள் 17 ஆம் நாள் (31-01-99) இன்று தைப்பூச வேளையில் கிரியா கலாபமணி, சிவப்பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் அவர்களால் குடமுழுக்குக் கிரியைகள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியிலே உள்ள ஏனைய ஆலயங்களுக்கு எல்லாம் காவல் தெய்வமாக விளங்கும் ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் இன்று இடம் பெறும் பெருஞ் சாந்தி என்னும் கும்பாபிஷேக விழா இப்பகுதி மக்கள் மத்தியில் இறையுணர்வையும், சமூகசேவை செய்யும் மனப்பான்மையையும் நிலை நிறுத்துவதாய் அமையட்டும்.

இன்று நடைபெறும் மஹாகும்பாபிஷேகம் வைரவப் பெருமானின் அடியவர்களுக்கு எல்லா நலன்களையும் மங்களங்களையும் நல்கும்.

*

மலர் வெளியீடு:
**ஆலய நிர்வாக சபை**


## ஞான வைரவர் பெருமானின்
## மகாகும்பாபிஷேக நிகழ்வினை வாழ்த்தி வணங்குகின்றோம்

சி. சிவசங்கர்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

ஆறுமுகம் சிற்பாலயம்
காளி கோயிலடி,
திருநெல்வேலி.

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

வலம்புரி வீடியோ
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

சணமுகம்
திருமணப் பந்தல்
சேவையும்
வீடியோ
படப்பிடிப்பாளரும்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

லிங்கம்
சிகை அலங்கரிப்பு
நிலையம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

ராசா
வர்த்தக நிலையம்
பலாலி வீதி,
திருநெல்வேலி.
உரிமையாளர்:
S. யோகராசா

கவாஸ்
வெளிநாட்டு உள்நாட்டு
தொலைத் தொடர்பகம்
டிப்போ சந்தி,
கோண்டாவில்.

சுகந்தன்
எரிபொருளகம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.


துர்க்கா களஞ்சியம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

வீடியோ சண்
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

வலம்புரி கிறீம் ஹவுஸ்
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குடியிருந்த கோயில்

**திருமதி சின்னையா நாகம்மா**

மலர்வு 02 — 03 — 1913 உதிர்வு 11 — 02 — 1998

திதி: தைபூரணை 31 — 01 — 1999

அன்புத்தெய்வமே! அணையாத ஜோதியே!
பாசத்தின் உறைவிடமாக இருந்து எம்மைப்
பண்போடும், நேசத்துடனும் வளர்த்தாய் அம்மா!
சென்றது எங்கே செந்திருவே!
உந்தன் அன்பு முகம் காணாது
அகன்றதே ஓர் ஆண்டு!
உங்கள் ஆத்மா சாந்திபெற நல்லூர்க்
கந்தன் அருள் வேண்டி என்றும்
கைகூப்பி நிற்கின்றோம்.

உங்கள் நினைவில்
**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

ஒழுவில் றோட்,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (62599)

## 3 ஆம் ஆண்டு நினைவுகள்



திருமதி

**அன்னலட்சுமி இராசையா**

வரவு 03—03—1931 பிரிவு 03—02—1996

திதி: 31 — 01 — 1999

சேர்ந்து வந்த பயணத்தின் இடைநடுவில் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈசனடி சேர்ந்து ஆண்டுகள் மூன்று கடந்து விட்டாலும்...

உங்களின் பசுமை நிறைந்த நினைவுகளை மனம் நிறைந்த சுமையாகத் தாங்கி நிற்கின்றோம்.

மூன்றாம் ஆண்டில் உங்கள் நினைவுகளை மீட்கும்

**கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.**

மாத்திரா வளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (62609)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஜன. 31

வண்ணை — சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடத்தப்படும் சைவ சமய அறிவுப் பரீட்சை இன்று முற்பகல் 9.30 மணிக்கு குடாநாட்டில் உள்ள 10 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

ஆண்டு 1, 2 மாணவர்களுக்கான நீதி நூல் மனனப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் —

கோலம் போடுதல், மாலை கட்டுதல் மற்றும் தோரணம் பின்னுதல் ஆகியவற்றுக்கான செயன்முறைப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

★ ★ ★

அகில இலங்கை கம்பன் கழகம் ''சுப்பர் கோல்டன் பீஸ்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் நிலாக்கால நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கம்பன் கோட்டத்தில் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

''வெண்பா அடியெடுத்து வேதனையைச் சங்கரிக்க இன்றிளையோர் வந்தோம் எழுந்து'' என்ற தலைப்பில் இளைஞர் கவியரங்கு இந்த நிகழ்வில் இடம்பெறும்.

(உ-3)

★ ★ ★

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(இ-135)

★ ★ ★

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு உரும்பிராய் தெற்கில் உள்ள ஞான வைரவர் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு இன்றைய தினம் கண்ணாடி வழங்கப்படும் என நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் பா. தவபாலன் அறிவித்துள்ளார்.

(உ-7)

★ ★ ★

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தால் அண்மையில் நடத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு பதிவு செய்து வசதி குறைந்த மக்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வைத்து அவை வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் லயன் ஏ. சி. செபநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் கா. குகபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-100)

★ ★ ★

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் பொன்விழாவும், புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலையும், மாலையும் இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளன.

காலை 10 மணிக்கு நிகழும் பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவில் சர்வோதய அமைப்பின் செயல் திட்ட அத்தியட்சகர் எஸ். வி. சங்கரப்பிள்ளையும் — பிற்பகல் [illegible] மணிக்கு இடம் பெறவுள்ள பொன் விழா நிகழ்வுக்கு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-7)

★ ★ ★

திருநெல்வேலியில் உள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிறு காலை 9 மணி முதல் மாதாந்த போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, தியானம், பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகளுடன் நண்பகல் நாராயண சேவையு இடம்பெறும்.

(ஐ)

## ஐவர் விடுவிப்பு

விசாரணை இன்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 பெண்கள் உட்பட 5 பேரை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் நீதி மன்றத்திற்கு சிபார்சு செய்துள்ளார்.

சுழிபுரம் வாசிகளான குலசிங்கராஜா தர்ஷினி, குலசிங்கராஜா ரமணன், குலசிங்கராஜா சிவனேஸ்வரி, கரணவாய் வாசிகளான எஸ். தங்கவடிவேல் இவரது மகள் கணேஸ்வரி ஆகியோரே மேற்படி ஐவரும் என மனித கௌரவத்திற்கான அமைப்பு இணைப்பாளர் மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்தார்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 — 12 — 1923



ம[illegible] 16 — 01 — 1999

அமரர்

**இராமலிங்கம் பொன்னுத்துரை**

16—01—99 இல் சிவபதமடைந்த பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த இராமலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் சபிண்டீகரணம் இன்று (31—01—99) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

192, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (62573)

## இருவிழிகள் இமைக்க மறந்த முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

**சிவயோகம் திரவியம்**

மலர்வு 15 — 10 — 1934 உதிர்வு 11 — 02 — 1998

திதி: பூரணை 31 — 01 — 1999

ஓராண்டு ஆனதம்மா இன்முகம் கண்டு நாம் தரமுயர வாழவைத்த தாயுன்னை இதயக் கமலத்திருத்தி புட்டபர்த்தி வாழ் சாயீசன் பதம் நிதம் கரம் குவித்து இறைஞ்சுகின்றோம்; சாந்தி அருளிடவே. என்ன துயர், என்ன பிணி எவ்வளவோவுற்றாலும் அத்தனையும் நீ தாங்கி ஆன பணி செய்தாயம்மா! அம்மம்மா, அப்பம்மா என அழைக்கும் பேர்த்தி, பேரர்க்கு அம்புலி காட்டி நல் அமுதூட்டும் முன்பே சித்தமே கலங்க வைத்து சிவகதியுற்றதேனோ?
சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
**கணவர், மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.**

31, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். (62615)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உசன் கந்தசுவாமி கோயில் மக

(31 - 01 - 19

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

சிவனேய செல்வர்களே,

உசன் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மன நிறைவைத் தருகின்றது. கலியுக வரதனாம் கந்தப்பெருமான் உசன் பதியில் வாழ் மக்களுக்கு வேண்டியவற்றை வேண்டியவாங்கே ஈகின்றவனாக வீற்றிருக்கின்றான்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தைக் காண்பது ஆலயத்தினுடைய அறப்பணிகளை ஓங்கச் செய்வதற்கும் மக்களுடைய துயரங்களை நீக்குவதற்கும் சைவமக்கள் ஆசார சீடர்காளகவும், தர்ம சிந்தனையுடையவர்களாகவும் வாழ்வதற்கு வழியாக அமைந்துள்ளது.

முருகன் அடியார்கள் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து முருகப்பெருமானுடைய அருளைப்பெற்று நிறைவாக வாழ்வதற்கு இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

- என்றும் வேண்டும் இன்ப அன்பு -

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## தர்மகர்த்தாவின் உள்ளத்தில் இருந்து

ஈழத்தின் வடபகுதியான யாழ்ப்பாணக் குடா நாட்டில் தென்மராட்சி கிழக்குப்பகுதியில் மிருசுவிலுக்கருகில் காணப்படுவது ''உசன்'' என்னும் தொன்மைமிகு கிராமமாகும். இக்கிராமம் வயல் நிலங்களால் சூழப்பெற்று மருத நிலப் பண்புகளையும் மிகையாகக் கொண்டிருக்கின்றது. இக் கிராமத்தின் மையப்பகுதியில் உயர்ந்தோங்கி நின்று இக் கிராமத்திற்கு சிறப்பைக் கொடுப்பது தான் தொன்மைமிகு கந்தப் பெருமான் ஆலயம்.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் ஆறுமுகப் பெருமானின் வேல் கம்பீரமாக வீற்றிருக்க இறைவன் வள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி இக்கிராம மக்களின் காவற்தெய்வமாகித் தம்மை நாடிவரும் அடியவர்களின் துயர்களைப் போக்கி நல்லருள் புரிந்து வருகின்றார்.

இவ்வாலயம்மூர்த்தி, தலம், தீர்த்தம்என்னும் முச்சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலமாகும். இப்புண்ணிய ஷேத்திரம் நீண்ட காலத்தின் பின்னர் புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது.

அருள்மிகு கந்தப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேகம் இன்றைய நன்னாளில் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இச்சுபமங்கள வைபவத்தில் பங்குகொள்ளும் பாக்கியம் கிட்டியவர்கள் பாக்கிய சாலிகளே.

இத் திருக்கோயிலின் கம்பீரத்திற்கு மெருகூட்ட இராசகோபுரத்தை அமைப்பதற்காக கால்கோள் இடப்பட்டுள்ளது என்ற நற்செய்தியை முருகனடியார்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாலயத் திருப்பணியைச் சிறப்பிக்க உதவியவர்களுக்கும் குறிப்பாக உரிய நேரத்தில் வேண்டிய ஆலோசனைகளை வழங்கியும் இக்குடமுழுக்கு பெருவிழா சிறப்புற அமைய தலைமையுமேற்றிருக்கும் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சுந்தரேஸ்வர சர்மா அவர்களுக்கும், ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ கேதீஸ்வர சர்மா அவர்களுக்கும் ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சங்கரசுப்பிரமணிய சர்மா அவர்கட்கும் மற்றும் இவர்களுடன் இக்கிரியைகளில் ஈடுபட இருக்கும் சிவாச்சாரியார்கட்கும் எனது அன்பான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாலயக் கட்டுமான மீளமைப்புப் பணியில் அயராதுஉழைத்த கட்டட, சிற்ப மற்றும் ஓவிய விற்பன்னர்களுக்கும், ஆலய சரியைத் தொண்டில் ஈடுபட்ட முருகனடியார்களுக்கும், இந்து இளைஞர் மன்றத்திற்கும், உசன் மகாவித்தியாலயத்திற்கும் எனது மனமுவர்ந்த நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இக்குடமுழுக்கின் மகிமையால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்வாழ்வும் சாந்தியும் சமாதானமும் கிடைக்க எல்லாம் வல்ல உசன்கந்தப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

**குகதாசன் விமலதாஸ்.**
ஆலய தர்மகர்த்தா

## ஆலயப் பிரதமகுரு அருளாசி

திருவருள்மிகு கலியுக வரதனாம் கந்தப்பெருமானுடைய புகழ் சைவ உலகம் முழுவதும் பரவியிருக்கின்றது. அவனுடைய அருளோ அண்டங்களுக்கு அப்பாலும் அங்குமிங்குமென்னாதபடி நீக்கமற நிறைந்துள்ளது. தென்னை, வேம்பு, மருதம் சூழ நல்லதொரு தெய்வீகச் சூழலிலே உசன் முருகன் எழுந்தருளி அடியவர்கள் எல்லோருக்கும் வேண்டுகின்றவரங்களை நல்கி, தன் வசமாக்கி, ஆனந்தத்தில் திளைத்து எப்போதும் நெஞ்சை விட்டகலாது இருக்கின்றான்.

இவ்வாலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகளைக் கண்டு ஆனந்திப்போர் பலர். இவ்வாலயத்தில் கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு. இப்படிப் பலவகைச் சிறப்புப் பெற்ற இவ்வாலயத்தில் கடந்த வருடம் தொடங்கிய திருப்பணிகள் எல்லாம் நிறைவு பெற்று தைப்பூச நன்னாளில் 'சம்ரோக்ஷண மகா கும்பாபிஷேகம்' நடைபெறுகின்றது. உசன் முருகனடியார்களும், தர்மகர்த்தா திரு. கு. விமலதாஸ் குடும்பத்தினர்களும் இப்புனிதப் பணியைச் செவ்வனே நிறைவேற்ற எல்லாம்வல்ல வேற்பெருமான் அருள்பாலிப்பாராக.

'லோகா சுகினோ பவந்து'
கிரியா சிரோன்மணி
**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**

## பிரதேச செயலர் வாழ்த்து

கலியுகத்தில் கந்தனே கண்கண்ட தெய்வம் கலியுக வரதன் என்று போற்றப்படுகிறான். கலியுகத்தில் மட்டுமல்லாது, எல்லா யுகத்திலும்தோன்றி, எல்லோரையும் காத்தருள்பவன் முருகன். அத்தகைய கடவுளாகிய முருகப்பெருமான் அருள் பாலிக்கும் மகிமையும் பெருமையும் உசன் முருகன் ஆலயத்திற்கு உண்டு.

இவ்வாலயத்தில் நடைபெறும் மகா கும்பாபிஷேக பெருவிழாவில் ஓதப்படும் திருமந்திரங்கள் மூலமும், திருக்குடத்தில் இருந்து வரும் நீர்த்துளிகள் மூலமும் இன்னலுற்றுத் தவிக்கும் மக்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ வழி பிறக்க வேண்டுமெனவும்பிரார்த்திக்கிறேன்

தென்மராட்சி **பு. சுந்தரம்பிள்ளை**

## உசனூரில் அமர்ந்த கந்தன்

ஆதியாய்ச் சரவணத்தில் உதித்த கந்தன்
ஆறுபடை வீற்றிருக்கும் கருணைக் கந்தன்
சோதிமயில் ஏறி வரும் சுடர்வேற் கந்தன்
சூர்குலம் சங்காரம் செய்த கந்தன்
மருதிருவர் கொண்டமண வாளக் கந்தன்
வரமடியார் துயர்போக்கும் வரதக் கந்தன்
நீதிவளர் உசனூரில் அமர்ந்த கந்தன்
நிறைகும்பா பிஷேகவிழா சிறந்து வாழி

**அருட்கவி. சீ, விநாசித்தம்பி**
தலைவர்.
இந்து சமயப்பேரவை.

## இந்து இளைஞர் மன்ற வாழ்த்து

தென்மராட்சியின் உசன் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதையிட்டு அளவிலாப் பூரிப்படைகின்றோம்.

''கோயில் விளங்கக் குடி விளங்கும்'' என்பது ஆன்றோர் வாக்கு. கும்பாபிஷேகத்திற் கலந்து கொள்வதும் அதனைப் பார்ப்பதும் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். இந்தப்பேறு எமக்குக், கிடைத்திருப்பது பெரும் பாக்கியமே.

இத்தலம் பன்னெடுங்காலமாக, பல தலைமுறையாக கந்தபுராணபடனம் செய்யப்படுகின்ற புண்ணிய தலமாக விளங்குகின்றது. நம் முன்னோர்களால் நவிலப்பட்ட கந்தபுராண ஏட்டுச்சுவடுகள் இன்று வரை பக்தி பூர்வமாகப் பேணப்பட்டு வருகின்ற சிறப்பிற்குரியது இத்தலம்.

பழமையும், தனித்துவமும் கொண்ட மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடன் விளங்கும் இவ்வாலயத்தில் எழுந்தருளி இஷ்ட சித்திகளை எமக்கருளும் இறைவனுக்கு குட முழுக்குச் செய்யும் அந்தண சிரேஷ்டர்கள், ஆலய தர்மகர்த்தா, அடியவர்கள் மற்றும் பல்வேறு வகையிலும் பங்களிப்புச் செய்கின்ற யாவரும் கந்தப் பெருமானின் திருவருட் கடாட்சத்தினைப் பெற்றுய்ய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**இ. முருகதாஸ்,**
உசன் இந்து இளைஞர் மன்றம் செயலாளர்

## ஆலய வரலாற்று நினைவில் நி

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்
''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற
மைக் காலத்தில் உசன் வாழ் மக்களின் வணக்கத்தல
கோயில் இருந்து வந்தது. இங்கு ஞானவேலை வைத்
வேல் முருகனுக்கு வைத்திலிங்கம் என்ற பெரியாரா
இவ்வாலயமே தற்போதுள்ள உசன் கந்தசுவாமி கோ

இந்த ஞானவேல் முருகனுக்கு 1924 ஆம் ஆ
செய்து வைக்கப்பட்டது. ஆகம முறைப்படி அமைக்
நைமித்திய பூசைகள் முறைப்படி உரிய நேரத்திற்கு

இங்குள்ள சைவப்பிள்ளைகளுக்கு சைவப் பா
அறிந்த பெரியார் வைத்திலிங்கம் அவர்கள் சேர்
ஆலயத்திற்கு அண்மையில் ஒரு பாடசாலையை ஆர
பாடசாலையும் வளர்ச்சி பெற்று இப்போது கல்லூ
பல்கலைக்கழகம் (முன்பு பரமேஸ்வராக் கல்லூரி)
(இராமநாதன் கல்லூரி) ஆகியவற்றின் உடன் பிறப்

வைத்திலிங்கம் அவர்களைத் தொடர்ந்து அம
வினாசித்தம்பி, கனகரத்தினம், இராசரத்தினம், நட
தாக்களாக இருந்து வந்துள்ளனர். தற்போது கட
அவர்கள் மிகத் துடிப்புடன் செயற்பட்டு ஆலயத்திற்கு
பெருமான் இவரைத் தூண்டியுள்ளா என்று ...றிப்

அமரர் நடராசா தர்மகர்த்தாவாக இருந்த கா
செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு மூல
மூர்த்திகளாக சண்முகப்பெருமான், சிவகாமசுந்தரி சமே
சிவலிங்கம், பழனி ஆண்டவர், பூமிதேவி மகாதேவி சமே
பிரான், துர்க்கா. இலக்குமி, சரஸ்வதி, நவக்கிரக மூ
வர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

உண்டியல் இல்லாத ஆலயம் என்னும் பெரு
மகத்தே கொண்டுள்ளது. இங்குள்ள நடைமுறைகள்
சின்னையாக்குருக்களின் பரம்பரையினரே இவ்வால
யாற்றி வருகின்றனர். தற்போது சிவஸ்ரீ சுந்தரரேஸ்வர
கள், பிரம்மஸ்ரீ சங்கர சுப்பிரமணியசர்மா ஆகியோர் சி
கின்றனர். புராணபடனம் எக்காலத்திலும் தொடர்
பணியை இங்கு பட்டோலையில் குறிப்பிடப்பட்ட அமர
பதிப்பிள்ளை ஆகியோர்களுடன் இணைந்து சங்கீதபூஷ
முத்து ஆகியோர்கள் ஆற்றிவந்துள்ளனர். சங்கீதபூஷண
களுக்கு மேல் ஓதுவாராகக் கடமையாற்றி வருவது குறி
களுடன் எக்காலத்திலும் இவ்வூர் மக்கள் ஒன்றிணைந்
பிடத்தக்கது. முருகனின் கண்டாமணியோசை, பூசை
வாழ்வது பூர்வீக புண்ணியமே.

ஓய்வு பெற்ற

## கும்பாபிஷேகப்

பல்லவி

கும்பாபிஷேகம் உசன் குமரனுக்கு— இன்று
எம் பாவ விமோசனத்தின் தினம் எமக்கு

அனுபல்லவி

கந்தன் கருணை மழை பொழிவன் இன்று— அவன்
கற்பக் கிரகம் புகுந்து உறைவனின்று
(கும்பாபிஷேகம்)

சரணம்

அந்தணர் வேத ஒலி அமுதம் சிந்த — தமிழ்ப்
பண்டிதர் பஜனை ஒலி மதுரம் பொங்க
செந்தமிழ் கோயிலிலே சிறகடித்து — நம்
பைந்தமிழ் வளர்த்த கிளி பவனிவரும்
(கும்பாபிஷேகம்)

நம்பாத
தம் பா
செம்பா
வெம்
வேலன்
வேல் வ
பாலன்
பாலன்

(ஓ

கந்தக் கடவுளின் புணராவர்த்தன அஷ்டபந்
வழிபட்டு, வாழ்த்தி வணங்குகின்றோம்.


| | | | | |
|---|---|---|---|---|
| இராஜன் அரைக்கும் ஆலை<br>உசன். | தயானந்தா வெதுப்பகம்<br>உசன். | கஜன் ஸ்ரோர்ஸ்<br>விடத்தற்பளை வீதி, உசன். | கணேச வைத்திய நிலையம்<br>உசன், மிருசுவில். | அருள்நாயகி புத்தக<br>கண்டி வீதி, கொடிகா |
| ஐங்கரன் அரைக்கும் ஆலை<br>விடத்தற்பளை, மிருசுவில். | உசன்<br>இந்து இளைஞர் மன்றம் | வைகுந்தன்<br>அரைக்கும் ஆலை<br>உசன். | தனம் வசந்தா<br>கல்வி நிலையம்<br>உசன், மிருசுவில். | குலம் போட்டோ<br>உசன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

01 - 1999)

## ற்றுச் சுருக்கம்;
## ல் நின்றவை

இருக்க வேண்டாம்.'
ன்று'' என்ற முதுமொழிக்கிணங்க மிகத் தொன்
வணக்கத்தலமாக உசன் மடத்துக் கந்தசுவாமி
வலை வைத்துப் பூசித்து வந்தனர். இந்த ஞான
பெரியாரால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.
சுவாமி கோயிலாகும்.

24 ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகமும்
டி அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் நித்திய,
நேரத்திற்கு நடைபெற்று வருகின்றன.

சைவப் பாடசாலை இல்லாத பெருங் குறையை
ள் சேர் பொன். இராமநாதன் முகாமையில்
லயை ஆரம்பித்தார். ஆலயம் வளர்ச்சி பெற
து கல்லூரியின் தரத்தில் உள்ளது. இது யாழ்.
கல்லூரி) இராமநாதன் நுண்கலைக் கல்லூரி
டன் பிறப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

டர்ந்து அமரர்கள் இராமநாதன், சந்திரசேகரம்,
தினம், நடராசா ஆகியோர் ஆலய தர்மகர்த்
போது கடமையாற்றும் திரு. கு. விமலதாஸ்
ஆலயத்திற்குப் புதுமெருகூட்டியுள்ளார். முருகப்
என்று [illegible]றிப்பிடலாம்.

க இருந்த காலத்தில் பல மூர்த்திகள் பிரதிஷ்டை
. இங்கு மூலஸ்தானத்தில் ஞானவேலும், பரிவார
மசுந்தரி சமேத நடேசர், பார்வதி பரமேஸ்வரன்
காதேவி சமேத மகா விஷ்ணு, வைரவர், நாகதம்
நவக்கிரக மூர்த்திகள் மற்றும் சமய குரவர் நால்

ன்னும் பெருமையுடன் பல வளங்களையும் தம்
முறைகள் பட்டோலையாக எழுதப்பட்டுள்ளன.
இவ்வாலயச் சிவாச்சாரியார்களாகக் கடமை
ந்தரரேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ கேதீஸ்வரக்குருக்
ஆகியோர் சிவாச்சாரியார்களாக கடமையாற்று
தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்
பட்ட அமரர்கள் சின்னத்தம்பி, சண்முகம், கண
து சங்கீதபூஷணம் பேரம்பலம், பண்டிதர் சரவண
ங்கீதபூஷணம் பேரம்பலம் தொடர்ந்து 40 ஆண்டு
வருவது குறிப்பிடத்தக்கது. ஆலய அறங்காவலர்
ஒன்றிணைந்து செயல்பட்டு வருவது இங்கு குறிப்
சை, பூசை மணியோசை கேட்க இவ்வூர் மக்கள்

**க. பேரம்பலம்**
ய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்.

## கப் பாமாலை

நம்பாத மாந்தர்களை நலிய வைப்பான்—
நாளும்
தம் பாதம் தொழுபவரை பொலிய
வைப்பான்
செம்பாத கமலங்கள் தொழுபவர்க்கு—
செய்த
வெம்பாத கமலங்கள் விழுமவர்க்கு—
முருகன் (கும்பாபிஷேகம்)

வேலன் குடியிருப்பான் செந்தூரில் —
அவன் கை
வேல் வந்து குடியிருக்கும் நமதூரில்
பாலன் குடியிருப்பான் பழனியிலே —
அந்த
பாலன் இன்று குடிபுகுந்தான் உசனதிலே—
முருகன் (கும்பாபிஷேகம்)

**சங்கீதபூஷணம் ச. பேரம்பலம்**
(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்)

அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வின்
.

## துர்க்கா துரந்தரி வாழ்த்துரை

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற முதுமொழிக்கிணங்க எமது நாட்டின் நாலா பக்கங்களிலும் கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள மூர்த்திகளுக்கு இம் மாதத்தில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். நிறைநாளாக விளங்கும் தைப்பூச நாளிலே உசன் பதியில் அமைந்த முருகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு விழா நடைபெறுவது குறித்து மேலும் பேரானந்தம் அடைகின்றோம்.

எம்மை வாழ வைக்கும் தெய்வம் அம்பிகை துர்க்காதேவியுடன் அபயம் அளிக்கும் தெய்வமாக விளங்குபவர் உசன் கந்தப் பெருமானே என்பது எமது நம்பிக்கை. 'கார்மயில் வாகனனைச் சாந்துணைப்போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வுமில்லையே' என்ற கந்தர் அலங்காரப் பாடலின்படி 'கந்தா முருகா கவலைகள் தீர்ப்பாய்' என்று வேண்டி நின்ற பொழுது வெளிப்பட்டு அருள் தந்தவன் இப் பெருமான். பழமையும் மரபும் நித்திய நைமித்தியச் சிறப்பும் ஒரு சேரப் பெற்ற ஆலயம் இதுவாகும்.

ஆறுமாத காலம் இடம்பெயர்ந்து உசனுக்குச் சென்ற எமது மகளிர் இல்லப் பிள்ளைகளையும் எம்மையும் காப்பாற்றி வைத்து ஆதரித்த தெய்வமும் இப் பெருமானே. இதனை நாம் ஒரு போதும் மறப்பதற்கில்லை.

இக் குடமுழுக்கு விழாவினால் மேலும் மேலும் எமது மண் புனித சாந்நித்தியம் அடையும் என்பது திண்ணம். ஆகவே ஆலய அந்தணப் பெருமக்கள், அறங்காவலர்கள் அனைவரையும் வணங்கி வாழ்த்தி நிற்பது எமது தலையாய கடனாகும்.

**துர்க்காதுரந்தரி கலாநிதி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## உசன் தலத்தெழுக!

வீறுமிகு சூரனை வென்றமரர்மீட்டிட்ட
வேலாயுதக் கடவுளே!
மாறுபடு சூழலால் மனவேதனைக் கடல்
அலையால் அலைந்து நொந்தோம்.
ஆறுபடை வீடமர்ந் தடியார்க் கருள்செயும்
ஆறுமா முகவேந்தனே!
ஏறுமயில் ஏறிவந் தொழிலார் உசன்தலத்
தெழுந்தே யெமையாட் கொள்வாய்.

-சிற்பி.

## செஞ்சொற் செல்வர் வாழ்த்து

''கந்தனைப் போற்றுவார் மேற் காலனும் அணு கொணாதே'' என்பது அருளாளர் திருவாக்கு. ஈழத்திருநாட்டில் அமைந்த அருள் கொடுக்கும் ஆறுமுகப் பெருமானின் திருத்தலங்களில் உசன் கந்தன் ஆலயமும் பிரசித்தமானது.

மிகப் பழமை வாய்ந்த இத்தலம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, குடமுழுக்கு வைபவம் நடைபெற இருப்பது சைவ அன்பர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். மிகப்புனிதமான சைவ அனுட்டானங்களைப் பேணும் தென்மராட்சி மக்களின் உயர் தலமாய் இத்தலம் விளங்குகிறது.

அருள் வளம் அள்ளித்தரும் முருகனே அபயமென இவ்வூர் அடியவர்கள் பக்தி செலுத்தி வாழ்வதைக் காணலாம். அருள்வளத்தால் நிறைந்துள்ள இவ்வூர் மக்களின் மனவளமும் அகன்றது என்பதனை இடப்பெயர்வு காலத்தில் பலரும் அனுபவித்துப் போற்றினர். பல்லாயிரம் மக்களை உசன் பதி உறைந்த முருகவேளும். அடியவர்களும் ஆதரித்த மாண்பினை நீள நினைந்து வணங்கி வாழ்வு தரும் முருகனின் குடமுழுக்கோடு குவலயம் சிறக்கத் துதிப்போமாக.

**செஞ்சொற் செல்வர் - ஆறு. திருமுருகன்.**

## வைத்திய கலாநிதி வாழ்த்து

சைவத்தைத் தொண்டு தொட்டு பேணிப் பாதுகாத்து அதன்படி வாழ முற்படுபவர்கள் இக் கிராம மக்கள். இதற்கு உறுதுணையாக நிற்பது இந்தக் கிராமத்தில் உள்ள முருகன் ஆலயம்.

வடமாகாணத்தில் இவ்வாலயத்தைப் பற்றித் தெரியாதவர்கள் கிடையாது. நிந்திய, நைமித்திய, காமிய பூஜைகள் முறை தவறாது கட்டுப்பாட்டுடன் இங்கு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காலத்துக்குக் காலம் ஆலயத்தைப் பரிபாலித்த அறங்காவலர்கள் இறை அருளால் பல முன்னேற்றங்களைச் செய்து வந்திருக்கிறார்கள்.

இவ் வாலயத்தில் இறைவனடி சேர்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபானந்த வாரியாரும், தங்களுடைய பாதங்களைப் பதித்து அருளுரைகள் ஆற்றி உள்ளார்கள்.

ஆழ்ந்து அகன்று நுண்ணியனாக விளங்கும் ஞான'வேலை' மூலஸ்தானத்தில் இருப்பிடமாகக் கொண்ட இவ்வாலயம் பாரிய திருப்பணிக்குட்படுத்தப்பட்டு தைப்பூசத் திருநாளன்று பெரும் சாந்தி காண்கிறது.

தற்போதைய அறங்காவலர் கு. விமலதாஸ் அவர்கள் மிக இளம் வயதினர். பல இடையூறுகளுக்கு மத்தியிலும் தான் எடுத்த முயற்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து நிறைவேற்றுகின்றார்.

இத்திருப்பணிக்கு இவ்வாலயத்துக்குப் பொறுப்பாக உள்ள அந்தணப் பெருமக்களும் உறுதுணையாக நிற்கின்றார்கள். எமக்கு இந்த மகாகும்பாபிஷேகத்தை ஊனக் கண்ணால் தரிசிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க தெய்வத்தொண்டு.

**வைத்திய கலாநிதி க. மாணிக்கம்,**
(ஓய்வுபெற்ற மாகாண சுகாதாரப் பணிப்பாளர்)

## மாநகர சபை ஆணையாளர் வாழ்த்து

எமது யாழ்ப்பாண மாவட்டத்தில் அருள் பாலிக்கும் பழமையும், மகிமையும் கொண்ட முருகன் ஆலயங்களில், உசன் முருகன் ஆலயமும் ஒன்றாகும். இந்த முருகன் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் வேத, ஆகம முறைப்படி நடைபெறுவதை இடப் பெயர்வின் போது யான் நேரில் கண்டு ஆனந்தமடைந்தேன். இப்பேறு, எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

முருகனுக்குரிய '' தைப்பூசத் திருநாளிலே '' முருகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு பேரானந்தம் அடைகின்றோம். இப்பெருவிழா சிறக்க எல்லாம் வல்ல உசன் முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**வே. பொ. பாலசிங்கம்,**
மாநகர ஆணையாளர்.

யாழ்ப்பாணம்.

## இந்து நாகரிகத்துறை தலைவர் ஆசி

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியில் கிராமந்தோறும் எழுந்துள்ள கோயில்கள் அடியார்கள் மத்தியில் பக்தி உணர்வைப் பரப்பி வருகின்றன. இத்தகைய கோயில்களின் வரிசையில் இடம்பெறும் உசன் ஸ்ரீ கந்தசாமி கோயில் இப்பிரதேசத்திலுள்ள பழமை வாய்ந்த கோயில்களில் ஒன்று.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் வேற்பெருமான் எழுந்தருளி அடியார்கள் வினைதீர்த்து அருள் புரிகின்றார். எம்மனதில் உள்ள இருளை நீக்கி ஞான ஒளியைக் கொடுத்து அருள் தருவது வேல்.

முருகனுக்கு கந்த நாளாம் தைப்பூசத் திருநாளில் இக் கும்பாபிஷேகம் நிகழ்வது மற்மொரு விசேட அம்சம். சிலவருடங்களின் முன் நிகழ்ந்த இடப்பெயர்வின்போது 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்பதற்கேற்ப அனைவருக்கும் புகலிடம் தந்து பரிபாலித்த இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நிகழ்வது கண்டு சைவ உலகமே பூரிப்படைகின்றது.

மக்கள் அனைவரும் இன்னல்களில் இருந்து விடுபட்டு ஆனந்தமுடன் வாழவும் நாடு செழிக்கவும், உலகில் அமைதியும் அன்பும் பெருகவும் கும்பாபிஷேகத்தின் திருவருட்பேறு எங்கும் நின்று நிலவுவதாகுக.

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்**
யாழ். பல்கலைக்கழகம்.


கி புத்தகசாலை
, கொடிகாமம்.

உசன் ரேடர்ஸ்
பஸ்நிலையம், கொடிகாமம்.

ஸ்ரீவெற்றிலைக் கடை
சந்தை, கொடிகாமம்.

அருள் ரெக்ஸ்ரைஸ்ஸ்
கொடிகாமம்.

மணியம் ஸ்ரோர்ஸ்
கொடிகாமம்.

போட்டோ
உசன்.

மனோ வெதுப்பகம்
மிருசுவில்.

காமதேனு
பல்பொருள் வாணிபம்
உசன்.

பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
உசன்.

சிவகுரு
பல்பொருள் வாணிபம்
உசன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பனிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சிவலதா பகீரதனின் (746941390V) இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். நகரில் மினிபஸ் ஒன்றில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் A. பகீரதன் பனிப்புலம், பண்டத்தரிப்பு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (62574)

தையிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரஞ்சினிதேவி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் தாவடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுகுமார் கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (62622)

குழந்தைப்பிள்ளையின் பவுண் அரை ஞாண் கொடி பெரியாஸ்பத்திரிக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வைரமுத்து அன்சன்ஸ், 810, நாச்சிமார் கோயிலடி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். [62620]

சுப்பிரமணியம் சுதந்திரன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் [640293659V) யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து லிங்கன் கூல் பார், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [62613]

சடாச்சரம் சிவலோகநாதன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை [0908017708] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். [62624]

## திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (62269)

## தேவை

ஊனமுற்றோர் சங்கத்தில் பயிற்சி பெறுவோரது கைப்பணிப் பொருள்களைபாதுகாத்து வைப்பதற்கு அலுமாரிகள் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்க: செயலாளர் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் 39, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். (62529)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், தூய பிரயோக கணிதம், இணைந்த கணிதம் பல ஆண்டுகளாக கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாக, ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும், முடித்துக் கொடுக்கப்படும். தினமும் 2 மணிக்குப்பின் சந்திக்கலாம். R. பாலசுப்பிரமணியம், BSc. Dip in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [62641]

## கண்டெடுக்கப்பட்டது

உரும்பிராய் சந்திக்கு அருகில் ஒரு சிறிய தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: இல. 07 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [62634]

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்குண்டு. தினமும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [62603]

இறைச்சிக்குரிய கல்பேட்ஸ் சேவல் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [62610]

இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (62576)

## ஆங்கிலம் விஷேடமாக

O/L பரீட்சையில் Distinction, G.A.Q உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பில் A பெறுபேறுடைய (Spoken English உட்பட) கற்பிக்கப்படும் ஆசிரியர் B Sc. London Inter 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (62558)

## சிங்களா வகுப்பு

பேச, எழுத வாசிக்கவும், O/L பரீட்சையில் தக்க சான்று பெறும் வகையிலும் (தமிழ் மொழி மூலம்) ஆறு மாதங்களில் கற்பிக்கப்படும். ஆசிரியர் லீலாகிருஷ்ணன் ஆரம்பம்: 31—01—99 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு ஆறுகால்மடச் சந்தி, மானிப்பாய் வீதி. (அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்) (62564)

உ



### சுப்பர் கோல்டன் பீஸ்

நிறுவன ஆதரவில்

### நிலாக் கால நிகழ்ச்சி

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்.

காலம்:- 31 - 01 - 1999 ஞாயிறு மாலை 4-00

**இளைஞர் கவியரங்கம்**

அரங்கத்தலைமை:- கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன்

கவிஞர்கள்:- தி. திருக்குமார், கி. குருபரன், ச. தாட்சாயினி, சு. முரளிதரன், வே. ஜெகரூபன், த. ஜெயசீலன்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர்

(62597)

### சுன்னாகம் லயன்ஸ் கழகம்

### உயிர் காக்க நிதி தாரீர்

We Serve



குழந்தை

### ஜயசீலன் மேரி ஜெறீன்

சுன்னாகம் முத்துக்கிருஷ்ணா ஒழுங்கையைச் சேர்ந்த மேற்படி குழந்தை (வயது—03) விபரீத வியாதியால் கொழும்பு வைத்தியசாலை உட்பட பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றும் குணம் காணவில்லை. இவரது இரு மூத்த சகோதரர்களும் இது போன்ற வியாதிக்குப் பலியாகியுள்ளனர்.

இக்குழந்தையின் உயிர்காக்க துடியாய்த் துடிக்கும் பெற்றோர்கள் இந்தியா சென்று சிகிச்சை அளித்து, உயிர்காத்திட பொதுமக்களின் நிதியுதவி கோருகின்றனர். (சுமார் ரூபா 5,00,000 தேவை) சிறு துளி பெருவெள்ளம். வாரி வழங்கி குழந்தையின் உயிர்காப்பீராக!

தாங்கள் நிதியுதவியினை சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளர் அல்லது சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சே. க. 20596 இலக்கத்தில் வரவு செய்ய நேரடியாகவும் தங்கள் நிதி அனுப்பி உயிர்ப்பிச்சை கொடுப்பீர்களாக.

நன்றி!

லயன் ஐ. நற்குணநாதன்
செயலாளர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

(62562)

## புதிய பாடத்திட்ட கால்கோள் விழா

வலி. தென்மேற்கு, ஜன. 31

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த வாரம் புதிய பாடத்திட்டத்திற்கான கால்கோள் விழா இடம்பெற்றது

இதில் யாழ், பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் வாழ்க்கை தேர்ச்சிகள் பற்றி கருத்துரை வழங்கினார்.

கல்லூரி பிரதி அதிபர் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் உளவியலாளர் என். ஏ. விமலேந்திரன் கருத்துரை வழங்கினார். (ஐ-185)

சிவமயம்

இணுவில்

### கந்தசுவாமி கோயில்

### தைப்பூசப் பெருவிழா திருமஞ்சத் திருவிழா

இன்று, சண்முகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று, சண்முகப் பெருமான் விசேட மேளக் கச்சேரி சகிதம் திருமஞ்சத்தில் திருவீதியுலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் யாபேரும் எம்பெருமானின் இஷ்ட சித்தி பெற்றுய்வார்களாக!

குறிப்பு:

அருள்மிகும் இணுவில் கந்தசுவாமி கோயிலின் திருமஞ்சம் வரலாற்றுச் சிறப்பும், சிற்ப நுணுக்கங்களும் நிறைந்த பழம்பெரும் தெய்வீகப் பொக்கிஷம் ஆகும். இது தற்போது திரு கந்தையா சுந்தரலிங்கம் அவர்களினால் புதுவர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

- நிர்வாக சபை

இணுவில் கந்தசுவாமி கோயில்.

(சி/6300)

### மீண்டும் பண்டத்தரிப்பில் சிவாஸ் ஸ்ரூடியோ

31 - 01 - 1999 தைப்பூசத் திருநாளில்

**குதூகல ஆரம்பம்:**

சகல விதமான கலர், கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் ( 12 X 10 ) பெரிதாக்கல்

மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கு சிறந்த முறையில் நவீன கமராக்கள் மூலம் 'மிக்சிங்' செய்து VDO படங்கள் பிடித்திட சிறந்த ஸ்தாபனம்.

### சிவாஸ் ஸ்ரூடியோ

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

கிளைகள்:

1. சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
2. பிரதான வீதி, சித்தங்கேணி.

(62606)

இருபாலைச் சந்தி

### ஞானவைரவர் ஆலய தைப்பூச விழா

இருபாலைச் சந்தி ஞானவைரவர் ஆலய தைப்பூச விழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை (31—01—1999) காலை 8-00 மணியளவில் வைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று, மதியம் அன்னதானம் இடம்பெறும்.

**விசேட நிகழ்ச்சி**

பிற்பகல் 3-00 மணியளவில்

ஈழ நல்லூர் அருணா இசைக் குழுவினர் வழங்கும்

### "இசைத் தேன் அமுதம்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருவிழா உபயகாரர்கள்

ஒலி ஒளி அமைப்பு,
றோயல் சவுண்ட்,
அரியாலை,

விளம்பர அன்பளிப்பு:

### ஓம் முருகன் நகைமாடம்

இல. 5, மானிப்பாய் றோட்,
கைதடிச் சந்தி, கைதடி.

கிளை:

### ஓம் மகாலட்சுமி நகைமாடம்

இருபாலைச் சந்தி, இருபாலை. (62623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தூரத்தே வைக்க முடியாது!

இலங்கை இன நெருக்கடியின் விளைவாகத் தொடரும் போரினால் ஏற்படும் மனித அவலங்கள் கவலை தருகின்றன. சாத்தியமான அளவு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வு காண்பது இலங்கை அரசாங்கத்துக்கு உரியது.

ஏதாவது வழியில் எம்மால் உதவ முடியுமானால் நாம் உதவுவதற்குத் தயாராக இருக்கின்றோம். எவ்வாறெனினும் மத்தியஸ்தம் என்பது ஒரு போதும் திணிக்கப்படக் கூடாது. மத்தியஸ்தத்துக்கு அழைப்பு விடுக்கப்படவேண்டும். மத்தியஸ்தம் பல்வேறு வடிவங்களில் இடம்பெற முடியும்—

இவ்வாறு தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் கார்ள் இன்டர் வேர்த் தெரிவித்திருக்கிறார்.

வாஷிங்ரனில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் இனநெருக்கடியில் அமெரிக்காவுக்கு இராணுவ ஈடுபாடு எதுவும் இல்லை என்று சொன்ன அவர், பேச்சுவார்த்தை அல்லது மத்தியஸ்தம் குறித்து இலங்கை இன்னும் நாடவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே காணப்படவேண்டும் என்பது இலங்கை மக்களில் அதிகமானோரின் கருத்தாகும்.

இந்தக் கருத்துக்கு சர்வதேச மட்டத்திலும் ஆதரவு இருந்து வருகிறது.

இருதரப்பாரும் அழைத்தால் — கேட்டுக்கொண்டால் — தாம் மத்தியஸ்தப் பணியைச் செய்வதற்குத் தயார் என்று நோர்வே, கனடா, பிரிட்டன், தென்னாபிரிக்கா முதலிய நாடுகள் ஏற்கனவே அறிவித்ததின் உள்ளர்த்தம் — பேச்சுவார்த்தை தேவை; மத்தியஸ்தம் இன்றியமையாதது என்பதே.

ஆனால் இலங்கை அரசாங்கம். சமாளித்தல், மளுப்பல், சளப்பல் தந்திரங்களை — உத்திகளை — கையாண்டு வெளி உலகத்தை — சர்வதேச நாடுகளிடம் — மத்தியஸ்தம் தேவை இல்லை என்ற தனது சொந்த முடிவை ''நோகாமல் திணிக்க'' மிகத் தீவிரமாக முயற்சிக்கிறது, கடுமையாக உழைக்கிறது.

எனினும் அமெரிக்காவின் அமைச்சர் — தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் — இப்போது தெரிவித்திருக்கும் கருத்து இலங்கையின் ''நோகாமல் திணிக்கும்'' உத்தி எடுபடவில்லை, வெற்றி அளிக்கவில்லை என்பதனையே எடுத்தியம்புகிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை அமெரிக்காவின் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் சேர்ப்பிப்பதில் இலங்கை அரசு வெற்றி கண்டதாயினும் —

அரசியல் தீர்வு, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் ஆகிய இரண்டையும் தூரத்தே விலக்கி வைக்க முடியாது என்பதனை உணரச்செய்யும் அமெரிக்க 'அறிவுறுத்தல்'' இது!

# வடமராட்சி கிழக்கு விவசாயிகளுக்கு ரீ. டி. எம். உரம் வழங்க அனுமதி

வடமராட்சி, ஜன. 31

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு ரீ. டீ. எம். உரம், வீ-உரக்கலவை என்பவற்றை எடுத்துச் செல்ல படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரீ. டி. எம். உரம், வீ-உரக்கலவை என்பவற்றை எடுத்துச் சென்று கமநல கேந்திர நிலையத்தில் களஞ்சியப்படுத்தி அங்கிருந்து விவசாயிகளுக்கு விநியோகிக்க கமநல சேவைத் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து மேற்படி உர வகைகளை அம்பன் கமநல கேந்திர நிலையத்தின் ஊடாக எடுத்துச் சென்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதுவரை காலமும் இந்த உரவகைகளை வடமராட்சி கிழக்கிற்கு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. (ஐ-173)

## கப்பல் மூலம் வந்த மண்வெட்டி பிடிகளைபெற விவசாயிகள் பின்னடிப்பு

வலி. தென்மேற்கு, ஜன. 31

கொழும்பில் இருந்து மண்வெட்டிகளுக்கு என கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பிடிகளில் பெரும்பாலானவை மண்வெட்டிகளுக்குப்பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மண்வெட்டிகளுக்கு நீண்ட காலமாகப் பிடிகள் இல்லாததால் வழங்கப்பட்ட மண்வெட்டிகளைப் பயன்படுத்த முடியாதநிலை இருந்தது.

இதனையடுத்து மண்வெட்டிகளுக்கு பிடிகள் இறக்குமதி செய்யப்பட்டபோதும் அவை பொருத்தமற்ற வளைந்த கோணலான தடிகளாக இருப்பதனால் விவசாயிகள் அதனை விலை கொடுத்து பெறப் பின்நிற்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை—

மாவட்ட தே..வக்காக 10 ஆயிரம் பிடிகள் கொண்டு வரப்பட்டதாகவும்—

ஒவ்வொரு 100 தடியிலும் சுமார் 50 வீதமானவை பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை என்று பெரும்பாக அலுவலர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (ஐ-185)

## வசந்த மண்டபத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 31

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிறு காலை 7-30 மணிமுதல் தைப்பூச ஸநபன அபிஷேகம் நடைபெறும். அத்துடன் புதிய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் வைபவமும் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜன. 31

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட ஜி. சீ. ஈ. சாதாரணதர செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலை அதிபர்களுக்கான செய்முறைப் பரீட்சை அறிவுறுத்தற் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி பரீட்சை தொடர்பான சகல ஆவணங்களும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் இருப்பதால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் அனைவரையும் மேற்படி கலந்துரையாடலுக்கு சமுகம் கொடுக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார். (ஐ-4)

## பாடசாலை மட்ட தமிழ்தினப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜன. 31

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் தமிழ்தினப் போட்டிகள் யாவும் பாடசாலை மட்டத்தில் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பாக நடத்தி முடிக்கப்பட வேண்டும் என கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

பிரிவு மட்டத்திலான போட்டிகள் மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறும்.

மே மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் பிரிவு ஒன்றுக்கான பாடசாலைகளுக்குரிய போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலும்—

மே மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் பிரிவு இரண்டு பாடசாலைகளுக்குரிய போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

மே மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் பிரிவு மூன்று பாடசாலைகளுக்குரிய போட்டிகள் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலாவது நாள் மொழித்திறன் போட்டிகளும், இரண்டாம் நாள் கலைத்திறன் போட்டிகளும் நடைபெறும்.

இப் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெறும் மாணவர்கள் மே மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறும் வலய மட்டப் போட்டிகளில் ங்கு பற்றத் தகுதிபெறுவர். (ஐ-125)

## போக்குவரத்துச் சபைக்கு ஆள் சேர்ப்புப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜன 31

மத்திய போக்குவரத்துச் சபை வெற்றிடங்களுக்கு நிறைவேற்றுத்தரத்தில் நிரந்தர ஊழியர்களாகப் பட்டதாரிப் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான எழுத்துப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சையைக் கொழும்பில் நடத்துவதால் விண்ணப்பதாரிகள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் மத்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதை அடுத்து இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சையை எதிர்வரும் 21 ஆம் திகதியளவில் நடத்த ஏற்பாடு செய்யப்படுவதாகவும்—

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விரைவில் உரியவர்களுக்கு மத்திய போக்குவரத்துச் சபையினால் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும்—

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## நேர்முகப் பரீட்சை

வலி. தென்மேற்கு, ஜன, 31

தையற் பயிற்சி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச செயலர்அலுவலகத்தில்இடம்பெறும் என பிரதேச செயலர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகள் அனைவரையும் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அவர் கோரியுள்ளார். (ஐ-185)

## பாடசாலை மாணவரிடையே மகளிர் தின கட்டுரைப் போட்டி

வலி. தெற்கு, ஜன. 31

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே அனைத்துலக மகளிர் தினத்தை ஒட்டி கட்டுரைப் போட்டிகள் நடைபெற உள்ளன.

6 ஆம் 7-ஆம் தரங்கள் முதலாம் பிரிவாகவும், 8 ஆம் 9 ஆம் தரங்கள் இரண்டாம் பிரிவாகவும், 10 ஆம் 11 ஆம் தரங்கள் மூன்றாம் பிரிவாகவும், ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு நான்காம் பிரிவாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒருவர் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

பிரிவு ஒன்றுக்கான போட்டிகள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும்—

பிரிவு இரண்டுக்கான போட்டிகள் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

பிரிவு மூன்றுக்கான போட்டிகள் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் —

பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி காலை நடைபெறும்.

இப் போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை அவ்வப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்பு ஒப்படைக்குமாறு வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-152)

### நாளை

தை 18

திங்கட்கிழமை

திதி:, பிரதமை முன்னிரவு 10.01 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் முன்னிரவு 9.05 வரை.

சுபநேரம்: 12.36-2.06

ராகுகாலம்: 8.06-9.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உனது காலில் ஓர் ஊசி தைத்தால் ஓ வென்று அலறி விழும் நீ மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதே.

விவேகானந்தா

## சமய சந்நிதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 31

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில் பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை ஒட்டி இன்று ஞாயிறு காலை 7.30 மணி முதல் இயந்திர பூசை ஆரம்பமாகும். (ஐ-30)

★ ★ ★

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ 30)

★ ★ ★

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மருதடி எழும்பிள்ளையார் கோயிலில் இன்று 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயத்துக்கு 6.30 முதல் 7.00 மணி வரையுமுள்ள சுப மூகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் ''கிரியா விபுதர்'' சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தைப்பூச ஆராதனை நடைபெறும். மாலை 4.30 மணிக்கு சுவாமி மஞ்சத்தில் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

தொண்டமானாறு செல்லச் சந்நிதி கோயில் தைப்பூச உற்சவம் இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

உற்சவத்தை ஒட்டி விசேட பூசைகளும், சுவாமி வீதிஉலா வருதலும் இடம்பெறும்.

கோயில் சுற்றாடலில் உள்ள மடங்களில் அன்னதானமும் இடம்பெறும். (ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 30

அச்சுவேலி சித்திரவேலாயுதர் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தைப்பூசத் திருவிழா நடைபெறவுள்ளது. (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 31

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு தைப்பூச தினமாகிய இன்று சத சங்காபிஷேகமும், விசேட தீபாராதனைகளும்நடைபெறவுள்ளன. (ஐ-க-30)

★ ★ ★

கோண்டாவில் வடக்கு அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக தினவிழா நேற்று சனிக்கிழமை நடபெற்றது. (ஐ-க-30)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6. 45 மணிக்கு 108 சங்காபிஷேகமும் பூசைகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பூக்கள்

எமது கலாசாலை விரிவுரையாளர்
திரு ஆ. மகாதேவன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பூரணம் ஆறுமுகம்


அவர்கள் காலமான செய்தி அறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக்காணிக் கையாக்குகின்றோம்.

2 ஆம் வருட விஞ்ஞானநெறி மாணவர்கள்,
பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.

(62621)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 — 01 — 1927



மறைவு 01 — 01 — 1999

அமரர்

### நவரத்தினம் நடராசா

(வாகன சாரதி)

அன்பான எம் திருவுருவே! நீர் எமையெல்லாம்
துன்பத்தில் மிதக்கவிட்டு தொலை தூரம் சென்ற
மாயந்தான் என்னப்பா?
நித்தமெல்லாம் உம் பிரிவை எண்ணி எண்ணி
பித்தாகிப்போன எம் மனதைத் தேற்றுவது யாரப்பா?

அன்னாரின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் 31 — 01 — 99 இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

137, மூத்த வினாயகர் வீதி,
கச்சேரி, நல்லூர்.

(62569)

மாநகரசபை கொல்களங்களில்

# இறைச்சிக்காக கால்நடைகளை வெட்ட நாளை முதல் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். மாநகர சபைப் பகுதியில் நாளை திங்கட்கிழமை முதல் கால் நடைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு சந்தைக்கு விடப்படும் என்று மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

கடந்த ஐந்து வாரகாலமாக யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் கால் நடைகள் இறைச்சிக்கு வெட்டப்படுவதில் சில கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் யாழ். கால் நடை வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்புடன் நோய்வாய்ப்பட்ட கால் நடைகள் இனம் காணப்பட்டன. ஏனைய கால்நடைகள் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டன. இதன் காரணமாக எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் கால் நடைகள் வழமையான நடைமுறைகளைப் பின்பற்றி பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மாநகரசபைக் கொல்களங்களில் வெட்டப்பட்டு விநியோகத்திற்கு விடப்படும். இவ்விடத்தைத் தவிர மாநகரசபை எல்லைக்குள் வேறு இடங்களில் கால் நடைகள் வெட்டப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

எமது பகுதியில் உணவினால் நோய் பரவாதிருக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பழுதடைந்த மாமிச உணவோ, தாவர உணவோ மாநகர சந்தைகளில், மற்றும் உணவு விடுதிகள், பொது இடங்களில் விற்பனை செய்வதை தடுக்க, கண்காணிக்க எமது சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு விற்பனையாளர்கள், பொது மக்கள் தரும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எழுதுவினைஞர்

போட்டிப்
பரீட்சைக்கான
பயிற்சி வகுப்பு
பிரிவு II
ஆரம்பம்: 01 - 02 - 99
காலை 9 மணி
ஆசிரியர்: அ. குமாரவேல்
புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(62469)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை—தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர்
சங்கம்
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(62245)

# செத்தல் மிளகாய்க்கு என்றுமில்லாத தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் செத்தல் மிளகாய்க்கு என்றும் இருந்திராத விலை உயர்வும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நகரில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களில் செத்தல் மிளகாய் முடிவடைந்திருப்பதால் மக்கள் செத்தல் மிளகாயைப் பெறுவதற்கு அலைந்து திரிவதைக் காணமுடிந்தது.

ஒரு சில வர்த்தக நிலையங்களில் செத்தல் மிளகாய் கிலோ முன்னூறு ரூபா முதல் முன்னூற்றி ஐம்பது ரூபா வரை விற்கப்பட்டது.

இதேசமயம் —

மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் செத்தல் மிளகாயின் கையிருப்பு முடிவடைந்திருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17-15)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி வேலாயுதம் பவானிதேவி
அவர்களின் தந்தையார்

### த. வேலாயுதம் அவர்கள்

28 - 01 - 99 அன்று திருகோணமலையில் சிவபதமெய்தி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

14 ஆம் அணி மாணவர்கள்
மருத்துவ பீடம்.

(62627)

## கண்ணீர் அஞ்சலி

எமது பேராசிரியர் செல்வி வ. அரசரெட்ணம்
அவர்களின் தயார்
திருமதி

### யோகவதி அரசரெட்ணம்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்கள்
14 ஆம் அணி மருத்துவ பீடம்

(62628)

உ

## கருணையம்பதி சனசமூக நிலைய திறப்பு விழா

காலம்: இன்று (31 - 01 - 1999) ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 4-00 மணி

தலைவர்: திரு. க. நாகலிங்கம்
பிரதம விருந்தினர்: திரு. S. சிறிநிவாசன் (பிரதேச செயலர், கரவெட்டி)
சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் திரு. P. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்துநாகரிகத்துறை. யாழ். பல்கலைக்கழகம்)

நிகழ்வுகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை
4. தலைமையுரை
5. திறப்புவிழா வைபவம் (பிரதம விருந்தினர்)
6. பிரதம விருந்தினர் உரை
7. சிறப்பு விருந்தினர் உரை
8. மாணவர்களுக்கு ஊக்குவிப்பு அன்பளிப்பு வழங்கல்
9. உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு பரிசு வழங்கல்
10. நன்றியுரை

வில்லிசை:
கலைஞானமாமணி சத்தியதாஸ் வில்லிசைக்குழுவினர் சிறுப்பிட்டி
விடயம்: "பக்த அனுசியா"

நாடகம்: கருணையம்பதி இளைஞர்கள் வழங்கும் "திருப்பம்"

### இன்னிசைக் கானங்கள்

செல்வாபுரம் சொர்ணா இசைக்குழுவினர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்

கருணையம்பதி ச. ச. நிலையம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

([illegible])

## இடமாற்றம்

சிவம் கட்டடம், காங்கேசன் சாலை,
இணுவிலில் இயங்கி வந்த

### "போட்டோ செலெக்ஸ்" புகைப்படக் கலையகம்

இன்று முதல் (31-01-99) 298, காங்கேசன் சாலை. மருதனார்மடம், சுன்னாகம் (Royal Lubrication Service Station-க்கு முன்பாக) எனும் முகவரியில் இயங்கும் என்பதனை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்,

சி. தனஞ்சயன் (சுங்கு,)
43, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

சி. சிவமோகன்,
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(62633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
நீராவியடி
## ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம்
யாழ்ப்பாணம்.
# தைப்பூசம்

31-1-99 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு
அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகம் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும்.
அடியார்கள் விநாயகப் பெருமானை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

ஆலயப் பிரதமகுரு
சிவாச்சாரியமணி
சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள்
விழா உபயகாரர்.
(சி/6329)

திருநெல்வேலி பழங்கிணற்றடி
## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
## வருடாந்த மகோற்சவம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | — | 31-1-99 (ஞாயிறு) முற்பகல் 11 மணிக்கு |
| கைலாசவாகனம் | — | 11-2-99 (வியாழன்) |
| சப்பறம் | — | 13-2-99 (சனி) |
| தேர் | — | 14-2-99 (ஞாயிறு) |
| தீர்த்தம் | — | 15-2-99 (திங்கள்) |

★ 16-2-99 (செவ்வாய்) நண்பகல் மகேசுர பூசையும், மாலை தண்டிகை உற்சவமும் இடம்பெறும்.

விளம்பர அன்பளிப்பு:
### தேவி தொலைத் தொடர்பு சேவை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(சி/6330)

சுதுமலை தெற்கில்
## தங்கமுருகன்
### சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
## THANGAMURUGAN
INTERNATIONAL TELECOMMUNICATION SERVICE

இன்று முதல் தனது இரவு — பகல் சேவையைக் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்கின்றது

உள்நாட்டு இல: 070 _ 212373

வெளிநாட்டு இல! 0094_70_212373

[சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் இருந்து 350 மீற்றர் தூரத்தில்]
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(66427)

# D. M. I
233, Stanley Road, Jaffna
## சிங்களம்
K. R. சூரி
பாடசாலை மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க புதிய பிரிவு ஆரம்பம்
02 — 06 — 99 சனி 2 மணி (ப. நே.)
குறிப்பு:
நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரிவுகளுக்கும் மேலதிக அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- D. SAM
(சி/6320)

# ஆலய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 31
கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமிகோயில் (புதுக்கோயில்) இன்று தைப்பூசதினமும் 1008 சங்காபிஷேகமும் நடைபெற்று பி. ப. 4-00 மணியளவில் விசேட மேளக்கச்சேரியுடன் முருகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

★ ★ ★

கோப்பாய் தெற்கு பழைய வீதி சிவஞான வயிரவர் கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 35 முதல் 8-15 மணிவரை உள்ள சுபநேரத்தில் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு சி. கிருபாகரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன. 31
யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு ஸ்ரீ மகாலெட்சுமி தேவிக்கு விசேட அபிஷேகம், பூசையும் பிற்பகல் 3.00 மணிக்கு சுமங்கலிகள் தீபபூசை உற்சவமும் நடைபெறும். (30)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜன. 31
திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு கந்த புராணப் படிப்பு ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறும். (இ-7)

★ ★ ★

தாவடி அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகர் கோயிலின் மணவாளக்கோல உற்சவம் இன்று ஞாயிறு காலை 8-30 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகும்.

ஆயிரத்தெட்டு நவோத்திர சங்காபிஷேகம் நடைபெற்று பகல் அன்னதானமும் இடம்பெறும். (இ-69)

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கீர்ணோத்தாரண அஷ்டபந்த மகாகும்பாபிஷேகம் இன்று ஞாயிறு காலை 7-45 மணி முதல் 8-30 மணி வரை வரும் கும்பலக்கின சுபமூர்த்த வேளையில் நடைபெறும்.

இந்த விழாவின்போது தசதரிசனம், விசேடபூசை, மகா அபிஷேகம் ஆகியனவும் இரவு திருக்கல்யாணமும் இடம்பெறும். [இ-15]

★ ★ ★

கோண்டாவில் ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு சங்கல்பம் நடைபெற்று அதனைத்தொடர்ந்து மூவர் அபிஷேகம், நவக்கிரக அபிஷேகம், மூவர் பூசை, நவக்கிரக பூசை ஆகியன இடம்பெறும். [இ-ரி]

★ ★ ★

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று ஞாயிறு மாலை 4-30 மணிக்கு சுப்பிரமணியனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட ஸ்நாபிஷேகம் நடைபெறும். [இ-ரி]

★ ★ ★

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று ஞாயிறு 11-00 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.

மாலை 3-00 மணிக்கு மகாலக்ஷ்மிக்கு பௌர்ணமி உற்சவம் நடைபெறும். [இ-ரி]

★ ★ ★

கொக்குவில் தாவடி, வேம்படி முருகமூர்த்தி கோயிலின் தைப்பூசத்திருவிழா இன்று ஞாயிறு மாலை 3-30 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயத்தில் தைப்பூசத்திருவிழா இன்று ஞாயிறு மாலை 3-30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

# பரிசளிப்பு விழா

மானிப்பாய் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி குணராசா கலந்து கொள்வார். (ஐ-135)

★ ★ ★

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் அதிபர் ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலயப் பிரிவு 1 இன் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

## ஆரம்ப விழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் ஆரம்பிக்கப்படும் தோல் பொருள் உற்பத்திச் சாலையின் ஆரம்ப விழா வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

வடமராட்சி தென் மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் ஆரம்பித்து வைப்பார்.

## அடிக்கல் நடும் வைபவம்

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். (இ-7)

★ ★ ★

கரவெட்டி பிரதேச சபை பிரிவில் சுமநல கேந்திர நிலையத்துக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று ஞாயிறு நடைபெறவுள்ளது.

கரனவாய் மூத்த விநாயகர் ஆலயத்தருகிலுள்ள காணி ஒன்றில் இக் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்படும்.

## கணாதிபன் தொலைபேசிச் சேவை
(ஐயர் கொம்யூனிகேசன்)
குஞ்சர் கடை அறிவாலயம் முன்பாக
கரணவாய்
இன்று முதல்
உள்நாட்டு அழைப்புக்கான கட்டணம் 7/-
உள்வரும் அழைப்புக்கான கட்டணம் 5/-
— நிர்வாகி
(62657)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
முயற்சி, திறன் விருத்தி மையம்
நிதி சேகரிப்புக்காக மேடை ஏற்றப்படும்
இ. முருகையனின்
## [] எல்லாம் சரிவரும் []
நாடகம்
நெறியாள்கை தே. தேவானந்
வேம்படி பெண்கள் உயர் கல்லூரி
31-01-99 காலை 10.00 மணிக்கு
மாலை 3. 00 மணிக்கு

விளம்பர அன்பளிப்பு
CITY TELECOM & COMPUTER SERVICE
No. 11, Parameswara Junction,
Thirunelvely, Jaffna.
(62656)

## எம் இதயம் தோய்ந்த அஞ்சலி
தனித்துவமிக்க இரசாயன ஆசான்
உயர்திரு. ஆறுமுகம் — மகாதேவா
அவர்களின் பாசமிகு அன்னை
## ஸ்ரீமதி ஆறுமுகம் - பூரணம்
அவர்களின் ஆத்ம சாந்திக்கு எம் பிரார்த்தனைகள்.
இயக்குநர், ஆசிரியர்கள்,
உதவியாளர்கள், மாணவர்கள்.
New Science Hall,
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.
(62654)

## கண்ணீர்ப் பூக்களின் காணிக்கை
தன்னிகரில்லா இரசாயனவியல் ஆசான்
உயர்திரு. ஆறுமுகம் மகாதேவாவை
தமிழுலகுக்களித்து அமரரான அன்னை
## ஸ்ரீமதி ஆறுமுகம் பூரணம்
அவர்களின்
ஆத்மா சாந்தி பெறுவதாக!
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.
BEACON கல்வி நிலையம்,
வதிரி - கரவெட்டி.
(62655)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
**சான்றிதழ் வழங்கல்**

எதிர்வரும் **5** ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நடைபெறவிருக்கும் எமது நிறுவன தினத்தில் 98/99 கல்வியாண்டில் தமது பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. எனவே 98 ஆம் ஆண்டு தமது பயிற்சி நெறிகளைப்பூர்த்திசெய்த மாணவர்கள் மட்டும் **02 - 02 - 99**க்கு முன்பதாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு:**

99 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமது பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான விசேடகூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி (புதன்கிழமை) 2-30 மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும்என்பதை அறியத்தருகின்றோம். அனைவரும் தவறாமல் சமுகம் தரவும்.

* நெல்லியடி கிளை நிறுவன மாணவர்கள் நெல்லியடி கிளை அலுவலகத்தில் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

- Director
I.I.S.
JAFFNA.

(சி/6327)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தகவலைத் தெரிவித்தார்,

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துக்காக மலேசியாவில் இருந்து ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும்—

குறிப்பிட்ட கப்பலின் காப்புறுதிப் பிரச்சினை காரணமாக அக்கப்பலைப் பெறமுடியாது போய் விட்டதாகவும்—

தொடர்ந்து இந்தச் சேவைக்காகக் கப்பல் ஒன்றைப் பெறும் முயற்சியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஈடுபட்டு வருவதாகவும்—அவர் மேலும் சொன்னார். (இ-5)

## சுதந்திரமாகச்...

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ளதாவது:-

யாழ். குடாவில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதில்லை அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் தமது தேவைகளுக்குரிய பொருள்களைத் திருப்தியான முறையில் கொள்வனவு செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

இங்கு சிவில் நிர்வாகத்திற்குரிய முழுப் பொறுப்புக்களையும் இராணுவமே கையாண்டு வருகிறது. இதனால் மக்கள் அதிருப்தியடைந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் விசாரணைகள் எதுவும் இன்றியும் வழக்குத் தாக்கல் இன்றியும் நீண்ட நாள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

போக்குவரத்து வசதிகள் இல்லாமையினால் யாழ். குடாவில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு மக்கள் சென்றுவர முடியாத நிலையில் உள்ளனர். மாணவர்கள் மற்றும் தொழில் செய்வோர் வர்த்தகர்கள் உட்பட பலர் சீரான போக்குவரத்து இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தத்தில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் சுட்டிக்காட்டியும், வலியுறுத்தியும் ஐ.நா. பாராமுகமாகவே இருந்து வருகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். குடாவில் ஐ.நா. தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நுண்கரு திட்ட வேலைகளை நேரில் பார்வையிடுவதற்காக கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஐ.நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி யாழ். அரச அதிபரைச் சந்தித்து இத்திட்டங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதுடன் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பளை போன்ற பகுதிகளுக்கும் விஜயம் செய்துள்ளார்.

நாளை வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்யும் அவர் அடுத்த வாரம் கொழும்பு திரும்புவார். (இ-5)

எமது
புதிய வெளியீடு!
**ராஜசேகர், சங்கவி**
**தலைவா**
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/6334)

# பட்டதாரி பயிலுநர்கள் 52 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம், வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை முதல் 52 பட்டதாரிப் பயிலுநர்கள் ஆசிரியர் நியமனங்களைப் பெறவுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நியமனம் தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்டவர்களை நாளை காலை 9-00 மணிக்கு சம்பந்தப்பட்ட வலயப் பணிமனைகளுக்கு வந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி இரு வலயங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் வவுனியா மற்றும் மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகளில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்ற 21 பேரும் நாளை முதல் ஆசிரிய நியமனம் பெறவுள்ளனர்.

இவர்களையும் நாளை காலை 9 மணிக்கு சம்பந்தப்பட்ட வலய கல்விப் பணிமனைகளுக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு வலயப் பாடசாலைகளிலும் ஆசிரிய நியமனம் பெறுபவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளிவரும். (இ-7-118-173-க)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 31

''இந்து மதவரலாறு'' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். பட்டப் படிப்புகள் கல்லூரியில் விரிவுரையாளர் வே. யுகபாலசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

ஆசிரியர் தி. மதிவதனன் இந்த நூலினை எழுதியுள்ளார். (இ-7)

## ஹாட்லியில் "கன்ரீன்"

நெல்லிபடி, ஜன. 31

மாணவர், ஆசிரியர் நலன் கருதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இன்று ''கன்ரீன் ஒன்று திறந்து வைக்கப் பட உள்ளது.

கல்லூரிக்கென 5 இலட்சம் ரூபா செலவில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணியிலே இந்த கன்ரீன் நிறுவப்பட்டுள்ளது. (இ-109-5)

## இளஞாயிறு வெளியீடு

வலி. தென்மேற்கு, ஜன. 31

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர் வெளியீடான 'இளஞாயிறு' நூல்வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகத்தினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஆங்கிலம்— தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மாணவர்களின் ஆக்கங்கள் இதில் வெளியாகி உள்ளன.

முதற் பிரதிகளை ஏ. தனராஜ், செல்வி எஸ். சிவஜா ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

இந்நிகழ்வில் சிறப்புப் பிரதிகளை திருமதி ஏ. விமலேந்திரன் வழங்கவுள்ளார். (ஐ-185)

**சிவநெறி கல்வி நிலையம்**
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

தரம் 3 முதல் O/L வரையிலான
வகுப்புக்கள் மிகவும் சிறப்பான முறையில்
நடைபெறுகின்றன.

கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 5 வகுப்புக்கள்
இந்த வருட அனுமதிக்கான கடைசிச்
சந்தர்ப்பம் இது.

(சி/6285)

நாளை ஆரம்பம்
**A/L 99**
**Day Class**
கணக்கீடு
திரு. பாலவாசன்
பங்குடைமை
**ஆரம்பம்:** 01 - 02 - 99
Mon. 10 a. m.
★ வாரத்தில் 8 மணித்தியாலவகுப்புகள்.
**விக்னா**
கல்வி நிறுவனம்
(62636)

**கல்கி சன்ஸ் இடமாற்றம்**

இல. 147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த கல்கி சன்ஸ் ஸ்தாபனம்
இன்று (31—01—99) தொடக்கம்
இல. 16 C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அரச வர்த்தக கூட்டுத்தாபனம் முன்பாக)

என்ற முகவரிக்கு
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**கல்கி சன்ஸ்**
16 C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(62649)

## மரண அறிவித்தல்

**தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்**

**(கிராமசேவகர், 3 ஆம் கட்டை, கோப்பாய்)**

பளையைப் பிறப்பிடமாகவும், கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம் 30 - 01 - 99 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும், கஜன், கஜீவன், காஜஜெனி, கஜனா, கவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சுவாமிநாதன், நாகரத்தினம், தர்மகுலசிங்கம், தர்மராஜசிங்கம், அருமைநாதன், அரியமலர், திருச்செல்வநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சம்பந்தர், இராசேந்திரம், காலஞ்சென்ற அன்னம் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி. ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி**

3 ஆம் கட்டை, கட்டைப்பிராய். (சி/6335)

**இன்று!**

**தைப்பூச நன்னாளில்**
**மகா கும்பாபிஷேகம் காணும்**
**நீர்வேலிக்கந்தா!**

எல்லோருக்கும் நல்லருள் நல்குவாயாக!!
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயில்
மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்புற நடைபெற எமது
வாழ்த்துக்கள்

மூன்றாம் அகவையில் இன்று
**சாரங்கா**
இரண்டாண்டுகள் நிறைவுடன் இன்று தைப்பூச திருநாளில் மூன்றாம் ஆண்டில் கால்பதிக்கும் சாரங்கா நகை மாடத்தின் உற்ற தூண்களாக திகழும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

**சாரங்கா நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No. 2480

**அருள் முருகன் நகையகம்** (தலைமையகம்) 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சிவா நகை மாடம்** (கிளையகம்) யாழ். வீதி, சாவகச்சேரி.
(சி/6326)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31 - 01 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org